# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)**

ஆணை எண்.182/பேரூ/2022
நாள்: 22.11.2022

திரு. ரா. விஜயகுமார்,
குரும்பபாளையம்,கோவை. ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
வேடபட்டி பேரூராட்சி. ... எதிர்மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், வேடபட்டி அஞ்சல், குரும்பாளையம், சின்னத்தம்மன் நகர், எண்.2 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. ரா.விஜயகுமார் என்பவரது 19.09.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.9.2022 அன்று பெறப்பட்டு 182/பே/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கோயம்புத்தூர் மாவட்டம், வேடபட்டி அஞ்சல், குரும்பாளையம், சின்னத்தம்மன் நகர், எண்.2 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. ரா.விஜயகுமார் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கடந்த 18.03.2022-ம் தேதியில் பொது தகவல் அலுவலர், வேடபட்டி பேரூராட்சி அலுவலகம், கோவை தெற்கு வட்டம், கோவை மாவட்டம் - 641 007 அவர்களுக்கு தகவல் பெறும் உரிமை சட்டம் - 2005 பிரிவு 6(1)ன் கீழ் தகவல்கள் வேண்டி மனுக் கொடுத்திருந்தேன். த.அ.உ.ச. பிரிவு 7(1)ன் படி தகவலை 30 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும். ஆனால் எனது மனு பிரிவு 6(3)ன் கீழ் அனுப்பப்பட்டதால் கூடுதலாக 5 நாட்கள் மட்டுமே எடுத்து கொள்ளும் பட்சத்தில் 35 நாட்களுக்குள் பதில் தந்திருக்க வேண்டும். ஆனால் மனு கொடுத்து இன்றுடன் 180 தினங்களுக்கு மேலாகிறது. 18.09.2022 அன்று வரை முறையான முழுமையான பதில் கிடைக்கப்படவில்லை. இதன் தொடர்ச்சியாக பல மனுக்கள் உயர்திரு. பொது தகவல் அலுவலர் கடித எண்.219/2022/அ நாள்:16.08.2022 கடிதத்தில் குறிப்பிட்ட அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் எங்களுக்கான அடிப்படை வசதிகள் தொடர்பான தகவல்கள் வேடபட்டி பேரூராட்சியிடமிருந்து பெற்றுத் தரக் கோரி மனுக்கள் பதிவு தபால்கள் மூலமும் ஆன்லைன் வழியாகவும் செய்திருந்தேன். இதன் விளைவாக அனைத்து அலுவலகங்களின் முன்னெடுப்புகளாலும் அவர்களின் தூண்டுதல்களாலும் மிகப்பெரும் திடுக்கிடும் உண்மையானது தற்போதைய பொது தகவல் அலுவலர் கடித எண்.219/2022/அ நாள்: 16.8.2022 மூலம் என்னை போன்ற சமூக ஆர்வலர்கள் மற்றும் பொது மக்களின் பார்வைக்கு

வெளியாகி வெளிச்சத்திற்கு வந்துள்ளது. அதற்கான மிகப் பெரும் நன்றியை தற்போதைய பொது தகவல் அலுவலருக்கு பொது மக்கள் சார்பாக தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

நான் கோரிய அனைத்து தகவல்களுக்கும் எவற்றுக்கும் முழுமையான பதில் கிடைக்கப் பெறவில்லை. அதற்கான காரணங்கள் இதுவரை அறியப்படாமல் மன உளைச்சலுடன் இருந்து வந்தேன். உயர்திரு பொது தகவல் அலுவலர் கடித எண்.219/2022/அ நாள்:16.8.2022 கடிதத்தில் குறிப்பிட்டுள்ள 2017க்கு முன் 20 ஆண்டுகள் என கணக்கில் எடுக்கும் பட்சத்தில் 1997–ஆம் ஆண்டு முதல் 2017 வரை அனைத்து கோப்புகள் மற்றும் ஆவணங்கள் இயற்கை சீற்றங்களான மழை மற்றும் காற்றினாலும் கரையான்களினாலும் சிதிலமடைந்து சீர்குலைந்தது படித்தறிந்து மிகவும் வேதனையடைந்தேன் காரணம் மக்களின் உயிருக்கும் அவர்களது உடைமைகளுக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டிய அரசே இவ்வாறு மெத்தனபோக்கான அலுவலக ஊழியர்களை வைத்து என்ன செய்யப் போகிறதென்று நல்ல வேளையாக தற்போதாவது இவ்வாறான நேர்மையான உண்மையான செயல் அலுவலர் எங்கள் பேரூராட்சிக்கு கிடைத்திருப்பது எண்ணி பெருமை அடைந்தேன்.

Public Records Act 1993 பிரிவு 6(1)-ன் கீழ் அரசு அலுவலகங்கள் சம்பந்தப்பட்ட பொது தகவல்கள், ஆவணங்கள் மற்றும் கோப்புகள் அனைத்தும் சேகரித்து பாதுகாப்பதென்பது அந்த அலுவலகத்தின் தலைமை அலுவலரின் தலையாய கடமை ஆகும். மேலும் பொது தகவல் அலுவலர் கடித எண்.219/2022/அ நாள்:16.08.2022 ஆனது 17.08.2022 அன்று மனுதாரருக்கு கிடைக்கப் பெற்றது அதில் அவர் குறிப்பிட்டுள்ள "20 ஆண்டுகளுக்குண்டான கோப்புகள் முழுவதும் பழுதடைந்தும் சிதிலமடைந்தும் போய்விட்டது" என்ற பதிலானது Public Records Act 1993 பிரிவு 9-ன் கீழ் குறைந்த பட்சம் 25 வருடங்களுக்காவது அரசு அலுவலகங்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்களை பாதுகாக்க வேண்டியதும், அவை தேவைப்படும் பட்சத்தில் தகவல்களை வழங்குவதும் அந்த அலுவலக தலைமை அலுவலரின் கடமை ஆகும். இவ்வாறான இயற்கை சீற்றங்களினால் சிதிலமடைந்து இருப்பின் அவற்றின் உண்மையான தகவல்களை கடந்த 05 ஆண்டுகளில் சம்பந்தப்பட்ட துறை மேலதிகாரிகளுக்கு முறைப்படி தெரிவிக்கப்பட்டு திரும்ப மீட்டெடுத்திருக்க வேண்டும் அரசு ஊழியர்கள் கடமையை மீறும் போதோ அல்லது உதாசினப்படுத்தும் போதோ அதற்குரிய தண்டனையாக Public Records Act 1993 பிரிவு 9ன் கீழ் ஐந்து வருட கடுங்காவல் தண்டனையும், ரூ.10,000/- அபராதமும் வழங்க வேண்டும் என்று இச்சட்டம் வலியுறுத்துகிறது.

மேலும் இவ்வாறான செயல்களில் மெத்தனப் போக்குடன் பணியாற்றும் அரசு ஊழியர்களை தண்டிக்கும் சட்டமாக இந்திய தண்டனை சட்டம் IPC Section 201 ஆனது 07 முதல் 10 ஆண்டுகளுக்கு கடுங்காவல் தண்டனை விதிக்க சம்பந்தப்பட்ட மத்திய மற்றும் மாநில அரசு ஊழியர்களை வலியுறுத்துகிறது. இந்த சம்பவத்தின் விளைவாக கீழ்க்கண்ட அனைத்து கோரிக்கைகளையும் பரிசீலனை செய்து நடவடிக்கைகள் எடுக்குமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவ செயலரிடம் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

<u>புகார் சம்பந்தமான கோரிக்கைகள்</u> :

1) பொது தகவல் அலுவலர் கடிதத்தின்படி 2017-க்கு முன் 20 ஆண்டுகளாக மண்ணால் கட்டப்பட்ட ஆவணப் பதிவேடுகள் பாதுகாப்பு அறையை பராமரிப்பு செய்யாத அலுவலக உதவியாளர்கள் முதல் செயல் அலுவலர்கள் வரை அனைவரின் மீதும் Tamilnadu Civil Services (Discipline and Appeal) Rules Act

1955, Tamilnadu Govt. Servants Conduct Rules 1973 மற்றும் திருத்தி அமைக்கப்பட்ட Tamilnadu Govt. Servants Conduct Rules 2013 பிரிவு 20-ன் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2) வேடபட்டி பேரூராட்சியின் பொது மக்களின் உடைமை சம்பந்தப்பட்ட கோப்புகள் மற்றும் ஆவணங்களை திரும்ப மீட்டெடுக்க முறைமன்ற நடுவம் சார்பில் சிறப்புக் குழு அமைத்து தீரவிசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

3) பேரூராட்சியின் உயர்மட்ட அதிகாரிகளான மாவட்ட ஆட்சியர் மற்றும் தலைமை இயக்குனர்களுக்கு இந்த நிகழ்வு தொடர்பாக தகவல்கள் அளிக்கப்பட்டிருப்பின் நடவடிக்கைகள் எடுக்கப்படாத அனைத்து அதிகாரிகளையும் விசாரணை வளையத்திற்குள் கொண்டு வரப்பட வேண்டும்; காரணம் இந்த நிகழ்வு தொடர்பாக கடந்த 18.08.2022 அன்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு புகார் மனுக் கொடுத்திருந்தும் அம்மனுவை தகவல் கோரிய மனுவாக பெயர் மாற்றம் செய்து ஆணை பிறப்பித்த மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளரும் அவரின் ஆணைக்கு கீழ் பணிந்து எனது புகார் மனுவை என்ன மனு என்றும் கூட பாராமல் மனுதாரரான என்னை அழைத்து விசாரணை மேற்கொள்ளாமல் மனுவின் பெயர் மாற்றம் செய்து 'திருடன் கையிலேயே சாவியை கொடுத்தாற்போல' செயல் அலுவலர் கைக்கு மனுவை மாற்றம் செய்திருப்பது ஆறு மாதங்களாக காத்திருக்கும் எனக்கு மிகவும் வருத்தம் அளிக்கிறது என்னை போன்ற சமூக போராளிகளின் கடைசி நம்பிக்கையாக தங்களிடம் கோருவது என்னவெனில் இந்த சம்பவத்தின் அனைத்து அரசு ஊழியர்களையும் தீர விசாரணை செய்து மிகப் பெரும் சமூக நீதி கிடைக்க ஆணையிடுமாறுக் கேட்டுக்கொள்கிறேன்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி வேடப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 04.11.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

3. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்திற்கு 10.11.2022அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.11.2022 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. 10.11.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை.

**வேடப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 03.11.2022 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

புகார் மனுதாரர் திரு. ரா. விஜயக்குமார் என்பவரது புகார் மனு தொடர்பாக எனது விரிவான அறிக்கையினை மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார். மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ளபடி இப்பேரூராட்சியின் கடந்த 2017 முதல் முந்தைய 20 ஆண்டுக்கு மேலான தகுதி வாய்ந்த ஆவணங்கள், கோப்புகள் பதிவேடுகள் ஆகியவை நாளது நாள் வரை நன்கு பராமரிக்கப்பட்டு அதில் கோரப்படும் தகவல்கள், விவரங்கள், பொதுமக்களுக்கு உரிய கட்டணம் வசூலிக்கப்பட்டு நகல்களாக சான்றுகளே வழங்கப்பட்டு வருகிறது. (ஒ.மு.மூ.மு கோப்புகளை தவிர) என்ற விவரம் மாண்பமை உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தெரிவித்துள்ளார். வேடபட்டி

பேரூராட்சியில் ஆவணங்களை பராமரித்திட தனியாக பதிவறை எழுத்தர் பணியிடம் அரசால் தோற்றுவிக்கப்படாத நிலையில் இப்பேரூராட்சியின் இளநிலை உதவியாளரால் கோப்புகள், ஆவணங்கள், பதிவேடுகள் ஆகியவை தற்போது பாதுகாப்புடன் முறையாக பராமரிக்கப்பட்டு வருவதாலும், மனுதாரர் தமது புகார் மனுவில் கேட்டுள்ளப்படி கடந்த 20 ஆண்டுகளில் வேடபட்டி பேரூராட்சியில் பணிபுரிந்த செயல் அலுவலர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் எவரின் மீதும் மனுதாரர் தெரிவித்துள்ள விதிகளின் கீழ் நடவடிக்கை தேவையில்லை என்ற விவரத்தினை தெரிவித்துள்ளார். மேலும் புகார் மனுதாரர் திரு. ரா.விஜயக்குமார் என்பவர் கடந்த 18.03.2022 மற்றும் 25.05.2022 ஆகிய தேதிகளில் தகவல் உரிமை பெறும் சட்டத்தின்கீழ் கோரியிருந்த ஆவணங்கள் மற்றும் தகவல்கள் ஆகியவை இவ்வலுவலக ந.க.எண். 219/2022 நாள் 17.05.2022 மற்றும் 11.07.2022 ஆகிய தேதிகளில் மனுதாரருக்கு பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டு மனுதாரரின் ஒப்புகை அட்டையும் பெறப்பட்டுள்ளது என்ற விவரம் மாண்பை உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார். கோயம்புத்தூர் மாவட்டம் வேடபட்டி பேரூராட்சி ஆவணயங்கள் யாவும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூலில் வழங்கப்பட்டுள்ள விதி முறைகள்படி வேடபட்டி பேரூராட்சியில் பதிவறை எழுத்தர் பணியிடம் தோற்றுவிக்கப்படாத நிலையிலும் பேரூராட்சி அலுவலகத்தில் சம்பந்தப்பட்ட இளநிலை உதவியாளர்களால் ஆவணங்கள் மற்றும் கோப்புகள் முறையாக பராமரிக்கப்பட்டு வருவதாலும், பொதுமக்கள் கோரும் ஆவணங்கள் தகவல் சட்டத்தின்கீழ் கோரிய ஆவணங்கள் தகவல்களாக வழங்கப்பட்டு வருவதால் புதிதாக ஆவணங்களை மீட்டெடுக்க அவசியம் எழவில்லை என்ற விவரம் மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் தீர்ப்பாயத்திற்கு தெரிவித்துள்ளார்.

புகார் மனுதாரர் திரு. ரா. விஜயக்குமார் என்பவரால் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அலுவலர்களுக்கு அனுப்பியிருந்த 23.08.2022 தேதியிட்ட புகார் மனுவின் பேரில் உரிய அறிக்கையினை தாக்கல் செய்ய அறிவுறுத்தி கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்களது கடிதம் மூ.மு./1/28113/2022 நாள் 29.08.2022ன் பேரில், கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்து மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது என்ற விவரம் மாண்பமை உள்ளாட்சி அமைப்புகளுக்கான முறைமன்ற நடுவத்திற்கு தெரிவித்துள்ளார். வேடபட்டி பேரூராட்சியில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளப்படியான பதிவேடுகள், ஆவணங்கள் கோப்புகள் யாவும் முறையாகவும் பாதுகாப்பாகவும் பராமரிக்கப்பட்டு வருவதாலும், மனுதாரரின் புகார்களில் தெரிவித்துள்ளதை நிராகரிக்குமாறு மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிவித்துள்ளார். மேற்படி அலுவலக நகலினை மாண்பமை உள்ளாட்சி அமைப்புகளுக்கான முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ளார். வேடபட்டி பேரூராட்சி உட்பட அனைத்து அரசு அலுவலகங்களிலும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூலில் வழங்கப்பட்டுள்ள அறிக்கையின்படி ஆண்டிற்கு ஒருமுறை மாவட்ட ஆய்வுக்குழு அலுவவரால் ஆய்வு செய்யப்பட்டு, அவர் தம் ஆய்வுக்குறிப்பின் அடிப்படையில் குறைபாடுகள் சரி செய்யப்பட்டு வருகிறது என்ற விவரம் மாண்பமை உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் தீர்ப்பாயத்திற்கு தெரிவிக்கப்படுகிறது. மாவட்ட ஆய்வுக்முவின் கடைசியாக ஆய்வு செய்யப்பட்ட ஆய்வறிக்கையினையும் அந்த ஆய்வு அறிக்கையின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரத்தை மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் தீர்ப்பாயத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் மனுவில் கோரியுள்ளபடி வேடபட்டி பேரூராட்சி உள்ளிட்ட அனைத்து பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி யாவும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கை சட்டம்

24/2014ன்படி ஆண்டுக்கு ஒருமுறை 100 சதவீதம் தணிக்கை நடைபெற்று தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளின் பேரில் சம்பந்தப்பட்ட அலுவலர்களை பொறுப்பாக்கி தடைகள் எழுப்பப்பட்டு வருகிறது என்ற விவரத்தையும் மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் தீர்ப்பாயத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது. எனவே, மனுதாரர் கோரிக்கையின்படி கடந்த 25 ஆண்டுகளாக வேடபட்டி பேரூராட்சிகள் ஆய்வு அறிக்கைகள் ஏதும் புதிதாக விசாரணைக்குள் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏழவில்லை என்ற விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் மனுவில் கேட்டுள்ளபடி தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறையின்படி ஒவ்வொரு மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களையும் ஆய்வு செய்ய தமிழக அரசால் மாவட்ட ஆய்வுக்குழு அமைக்கப்பட்டு ஆய்வுகள் செய்யப்பட்டு வரும் நிலையில் புதியதாக சிறப்புக்குழு ஏதும் தேவையில்லை என்ற விவரத்தினை மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் தீர்ப்பாயத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ளபடி Public Record Act 1993 ஆனது மத்திய அரசு அலுவலகங்களின் அலுவலக ஆவணங்கள் பராமரித்தல் தொடர்பாக மத்திய அரசு அலுவலகங்களுக்கு பொருந்துமாறு மத்திய அரசால் இயற்றப்பட்ட சட்டமாகும். இச்சட்டம் தமிழக அரசு அலுவலர்களுக்கு பொருந்தாது என்றும் தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் யாவும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூலின்கீழ் பராமரிக்கப்பட்டு வருகிறது என்ற விவரம் மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் தீர்ப்பாயத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**முறையீட்டு மனுதாரர் வராத நிலையில், கோயம்புத்தூர், வேடப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ள ஆவணங்கள் மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டு இம்முறைமன்றம் கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:-**

கோயம்புத்தூர் மாவட்டம், வேடப்பட்டி அஞ்சல், குரும்பாளையம் என்ற முகவரியில் சேர்ந்த திரு. ரா.விஜயகுமார் என்பவர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் கோரியுள்ள விபரங்களுக்கு தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் வழக்கு எண். 9862/SA/2022 நாள் 28.6.2022ன்படி 2017ற்கு முன்பு பேரூராட்சி அலுவலகம் ஒட்டுவில்லைகளால் அமைக்கப்பட்டதால் சுற்றுச் சுவர்கள் கரையானால் அரிக்கப்பட்டு கடந்த 20 ஆண்டுகளுக்குண்டான கோப்புகள் பழுதடைந்தும் சிதிலமடைந்து போய்விட்டது என்பதாலும் மனுதாரரின் கோரிக்கையின் அடிப்படையில் அலுவலகத்திலுள்ள தற்சமயம் இருக்கும் தகவலின்படி மட்டும் வழங்கப்பட்டுள்ளது. அதனால் எந்த லேஅவுட்களிலும் பேரூராட்சி மூலம் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டிருப்பது கூட கண்டறியப்படவில்லை என மனுதாரருக்கு பதில் அளிக்கப்பட்டுள்ளது.ஆனால் 3.11.2022 நாளிட்ட முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் வேடப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் 2017 முதல் முந்தைய 20 ஆண்டுகளுக்கு மேலான தகுதிவாய்ந்த ஆவணங்கள் கோப்புகள் பதிவேடுகள் ஆகியவை நாளது நாள் வரை நன்கு பராமரிக்கப்பட்டு அதில் கோரப்படும் தகவல்கள்,

விவரங்கள் பொதுமக்களுக்கு உரிய கட்டணம் வசூலிக்கப்பட்டு நகல்களாக சான்றுகளே வழங்கப்பட்டு வருகிறது என்ற தகவல் அளிக்கப்பட்டுள்ளது.

மனுதாரருக்கு அளிக்கப்பட்ட தகவல்களும் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பட்ட கடிதத்தில் உள்ள தகவல்களும் முன்னுக்குபின் முரணாக உள்ளது. தவறான தகவல்களை அளித்துள்ள செயல் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பேரூராட்சிகளின் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் வேடப்பட்டி பேரூராட்சியில் ஆவணப்பதிவுகள் முறையாகப் பராமரிக்கப்படுவதை உறுதிபடுத்தவும் அதனை தொடர்ந்து முறையாக கண்காணிக்கவும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

2022ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 22–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்/–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. ரா.விஜயகுமார்,
சின்னத்தம்மன் நகர், வேடபட்டி அஞ்சல்,
குரும்பாளையம்,
கோயம்புத்தூர் மாவட்டம். 641 007

2) செயல் அலுவலர்
வேடபட்டி பேரூராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் ஆணையாளர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர்நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.

4) இணை இயக்குநர்(பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலகம் ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28 (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக.